**இ.ம.எண். 2/2024–உள்**

**அ.வ.எண். 102/2024**

**தேதி : 08.06.2026**

**உத்தரவு**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1–ன் கீழ் மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு ஆவணங்களைப் பார்வையிடும்போது, அசல் வழக்கானது பிராது 2, 3 தபசில் சொத்துக்கள் வாதிக்கும், பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்ட பொதுநடைபாதை என விளம்புகை செய்வதன் மூலம், 2, 3 தபசில் சொத்துக்களைப் பயன்படுத்தி வாதி தனக்கு பாத்தியப்பட்ட பிராது 1ம் தபசில் சொத்தினை வெள்ளையடித்தும், ரிப்பேர் முதலிய வேலைகள் செய்தும் பராமரித்து அமைதியாக அனுபவம் செய்வதை பிரதிவாதியோ, அவரது வகையாட்களோ, அல்லது ஏஜெண்டுகளோ வேலியை அப்புறப்படுத்துவதன் மூலமாகவோ, அல்லது வேறு எவ்விதத்திலுமோ யாதொரு கட்டிடங்கள் கட்டுவதன் மூலமாகவோ அல்லது வேறு எவ்விதத்திலுமோ யாதொரு இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர தடையுத்தரவு கட்டளை பிறப்பிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், மேற்கண்ட பரிகாரத்தைப் பொறுத்து தற்காலிக உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி இந்த இடைக்கால மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், மனுதாரர்/வாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்களால், This I.A. may be closed subject to the result of the suit. என இம்மனுவில் மேலெழுத்து செய்யப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட மேலெழுத்தின் அடிப்படையில், இம்மனுவினை முடித்து வைக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மானித்து, நீதியின் நலன் கருதி இம்மனுவினை தள்ளுபடி செய்யலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக, இந்த இடைக்கால மனுவானது மேல்நடத்தவில்லை என்பதாக தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.**

**செலவுத்தொகை இல்லை.**

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 08 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PRAVEENJEEVA P

Uploaded on 09.06.2026
Digitally signed by PRAVEENJEEVA P
Date: 2026.06.09 16:58:43 +0530

முு.மா.உ.நீதிபதி,
கூ.மா.உ.நீதிபதி, (FAC)
அம்பை.